# U.G.DEGREE EXAMINATION – JUNE 2021

## தமிழ்

## முதலாம் ஆண்டு

## இக்கால இலக்கியம்

காலம் : மூன்று மணி மதிப்பெண்கள் : 75

**பகுதி - அ (10x1=10 மதிப்பெண்கள்)**

**எவையேனும் பத்து வினாக்களுக்கு ஓரிரு சொற்களில் விடை தருக.**

1. குயில்பாட்டு அச்சேறிய ஆண்டு எது?
2. இருண்ட வீடு காவியத்தின் ஆசிரியர் யார்?
3. ஆட்டனத்தி எந்த நாட்டின் மன்னன்?
4. மு.வ.வின் உரைநடை நூல்கள் ஏதேனும் மூன்றனை எழுதுக.
5. திரு.வி.க. அவர்களின் முழுப்பெயரை எழுதுக.
6. முருகன் அல்லது அழகு என்னும் கட்டுரை வெளிவந்த இதழ் எது?
7. கு. அழகிரிசாமி இயற்றிய நாடக நூல்கள் எவை?
8. கவிச்சக்கரவர்த்தி என்னும் நாடகம் யாரைப் பற்றியது?
9. சாகித்திய அகாதமி விருது பெற்ற கு. அழகிரிசாமியின் படைப்பு எது?
10. புதுமைப்பித்தனின் இயற்பெயர் என்ன?
11. புதுமைப்பித்தனின் படைப்புகள் நாட்டுடைமையாக்கப்பட்ட ஆண்டு எது?
12. புதுமைப்பித்தனின் சிறுகதைகள் மூன்றனை எழுதுக.
13. "ஞானபீட விருது"பெற்ற அகிலனின் படைப்பு எது?
14. அகிலனின் "சாகித்திய அகதமி விருது" பெற்ற படைப்பு எது?
15. பெண் புதினத்தின் முக்கிய கதாபாத்திரம் யார்?

**பகுதி - ஆ (5x2=10மதிப்பெண்கள்)**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஓரிரு தொடர்களில் விடை தருக.**

16. பாரதியாரின் குயில்பாட்டு எந்த இடத்தை மையமாகக் கொண்டு எழுதப்பட்டது?
17. ஆட்டனத்தி ஆதிமந்தி காவியத்தில் வரும் "மருதி"என்பவள் யார்?
18. மு.வ.வின் 'நல்வாழ்வு' என்னும் நூலில் கூறப்படும் கருத்துகள் இரண்டனைக் குறிப்பிடுக.

19. திரு.வி.க. வின் தமிழ் நடைக்குச் சான்று தருக.

20. தமிழ் நாடகத்தின் தோற்றத்தை எழுதுக.

21. புதுமைப்பித்தன் குறித்து சுருக்கமாக அறிமுகம் செய்க.

22. அகிலன் இயற்றிய புதினங்களின் பெயர்களை எழுதுக.

**பகுதி - இ** **(5x5=25மதிப்பெண்கள்)**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.**

23. "இருண்ட வீடு" காவியத்தில் வரும் பெண்ணின் இயல்புகளை விளக்குக.

24. "ஆட்டனத்தி ஆதிமந்தி"காவியம் குறித்து விளக்குக.

25. முருகன் அல்லது அழகு என்னும் நூலில் அமைந்துள்ள கட்டுரைகளின் பெயர்களை எழுதுக.

26. கவிச்சக்கரவர்த்தி நாடகத்தில் வரும் மாந்தர்களையும் அவர்களின் இயல்புகளையும் விளக்குக.

27. புதுமைப்பித்தனின் ஏதேனும் ஒரு சிறுகதை குறித்து விளக்கி எழுதுக.

28. புதுமைப்பித்தன் கதைகளில் வெளிப்படும் கேலியான கருத்துகளைச் சான்றுகளுடன் விளக்குக.

29. தமிழில் புதினத்தின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்து விவரிக்க.

**பகுதி - ஈ** **(3x10=30 மதிப்பெண்கள்)**

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விரிவான விடை தருக.**

30. பாரதியாரின் குயில்பாட்டு குறித்து விளக்கி எழுதுக.

31. மு.வ.வின் 'நல்வாழ்வு' நூல் குறித்து விளக்குக.

32. கவிச்சக்கரவர்த்தி நாடகத்தின் கதைச்சுருக்கத்தை விளக்குக.

33. புதுமைப்பித்தனின் படைப்புலகம் குறித்து கட்டுரை வரைக.

34. "பெண்" புதினத்தின் கதைச் சுருக்கத்ததை விளக்குக.

| UG-A-128 | BTM-11X |
|---|---|

# U.G. DEGREE EXAMINATION – JUNE 2021

## தமிழ்

## முதலாம் ஆண்டு

## இக்கால இலக்கியம்

காலம் : மூன்று மணி மதிப்பெண்கள் : 70

**பகுதி - அ (3 × 3 = 9 மதிப்பெண்கள்)**

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் 100 சொற்களில் விடை தருக.**

1. பாவேந்தர் பாடல்களில் காணலாகும் பொது இயல்புகளை வெளிப்படுத்துக.

2. 'முருகன்' என்னும் சொல்லின் தொன்மை குறித்து, திரு.வி.க. கூறுவன யாவை?

3. கவிச்சக்கரவர்த்தி நாடகத்தின் வழி, இராமாயணம் அரங்கேறிய சூழலைப் புலப்படுத்துக..

4. 'சாபவிமோசனம்' சிறுகதை உணர்த்தும் கருத்தினைப் புலப்படுத்துக.

5. கோ.வே. கீதா வரையறுக்கும் பாத்திரப் படைப்பின் கூறுகளைக் எழுதுக.

**பகுதி - ஆ (3 × 7 = 21 மதிப்பெண்கள்)**

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் 200 சொற்களில் விடை தருக.**

6. கவிஞர்கள் உணர்த்தும் சுற்றுச்சுழல் பாதிப்பை எடுத்துரைக்க.

7. உரிமையும் கடமையும் குறித்து மு.வ. கூறுவனவற்றை விளக்குக.

8. கவிச்சக்கரவர்த்தி நாடகத்தில் 'ஒட்டக்கூத்தர்' பாத்திரப் படைப்பை விவரி.

9. புதுமைப்பித்தனின் சிறுகதைகளில் வெளிப்படும் மனித முரண்களைப் புலப்படுத்துக.

10. 'பெண்' புதினத்தில் பயின்று வந்துள்ள பின்னோக்கு உத்தியை நிறுவுக.

**பகுதி — இ (4 × 10 = 40 மதிப்பெண்கள்)**

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் 500 சொற்களில் விடை தருக.**

11. குயில்பாட்டின் கதையமைப்பைத் தொகுத்துரைக்க.

12. 'முருகன் அல்லது அழகின்' வழி வெளிப்படும் திரு.வி.க.வின் மொழி நடையைப் புலப்படுத்து.

13. நாடக அமைப்பியலோடு 'கவிச்சக்கரவர்த்தி' பொருந்துமாற்றை புலப்படுத்தி விளக்குக.

14. புதுமைப்பித்தன் சிறுகதைகள் உணர்த்தும் சமூக அவலங்களைத் தொகுத்துரைக்க.

15. அகிலனின் படைப்பு நுட்பங்களைப் 'பெண்' புதினத்தின் வழி நிறுவுக.

16. தமிழில் புதினங்கள் தோன்றி, வளர்ந்த சூழலை விவரி.

17. மு.வ. கூறும் நல்வாழ்விற்கான வழிமுறைகளைத் தொகுத்துரைக்க.

| UG-A-129 | BTM-12 |
|---|---|

# U.G DEGREE EXAMINATION – JUNE 2021

**முதலாம் ஆண்டு**

**தமிழ்**

## இலக்கணம்-1 (நன்னூல்: எழுத்து, சொல்.)

காலம் : மூன்று மணி 　　　　　　　　　　　　மதிப்பெண்கள் : 75

**பகுதி — அ** 　　　　　　**(10 × 1 = 10 மதிப்பெண்கள்)**

**எவையேனும் பத்து வினாக்களுக்கு ஓரிரு சொற்களில் விடை தருக.**

1. நன்னூல் குறிப்பிடும் நூலின் வகைகள் எத்தனை?
2. மொழியில் எடுத்துக்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக.
3. செய்யுள் விகாரம் எத்தனை வகைப்படும்?
4. ‘உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே’ - விளக்குக.
5. மூவிடங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
6. போலியின் வகைகள் யாவை?
7. ‘இடைச்சொல் ஏஓ முன்வரின் இயல்பே’ - பொருள் தருக.
8. ஆகுபெயர் என்றால் என்ன?
9. சொல்லின் வகைகள் யாவை?
10. வழு விகற்பம் எத்தனை?
11. பொருள்கோள் இரண்டினைக் குறிப்பிடுக.
12. ‘சால உறுதவ நனிகூர் கழிமிகல்’ - விளக்குக.
13. மூவறிவு உயிர்களைக் குறிப்பிடுக.
14. ஏகார இடைச்சொல் எத்தனைப் பொருள்களைத் தரும்?
15. ‘பெயர்வழித் தம்பொருள் தரவரும் உருபே’ - பொருள் தருக.

**பகுதி — ஆ** **(5 × 2 = 10 மதிப்பெண்கள்)**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஓரிரு தொடர்களில் விடை தருக.**

16. உடம்படு மெய் குறித்தெழுதுக.

17. வேற்றுமைப் புணர்ச்சியில் தமிழ், தாழ் எனும் சொற்கள் பெறும் மாற்றத்தினை எடுத்துரைக்க.

18. தலை, இடை. கடை, மாணாக்கருக்கு நன்னூலார் தரும் எடுத்துக்காட்டுகளைத் தருக.

19. எழுத்துச் சாரியைகள் குறித்தெழுதுக.

20. வினையெச்சம் என்றால் என்ன?

21. 'இயற்பெயர் ஏற்றிடின் பின்வரல் சிறப்பே' - என இயற்பெயர் குறித்து நன்னூல் கூறுவது யாது?

22. கொண்டுகூட்டுப் பொருள்கோள் - விளக்கம் தருக.

**பகுதி — இ** **(5 × 5 = 25 மதிப்பெண்கள்)**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.**

23. நூலைக் கற்பிக்கும் நல்லாசிரியர் இலக்கணத்தைப் புலப்படுத்துக.

24. குற்றியலுகரம் என்றால் என்ன? எத்தனை வகைப்படும் எடுத்துக்காட்டுடன் தருக.

25. எழுத்துகளின் பிறப்பு குறித்த நன்னூலார் கூறுவன யாவை?

26. திசைப் பெயர்ச் சொற்கள் புணருமாற்றைத் தெளிவுபடுத்துக.

27. வினையெச்ச வாய்பாடுகள் குறித்தெழுதுக.

28. நன்னூல் வழி, வினா, விடை வகைகள் குறித்து விளக்குக.

29. உயர்திணை ஆண்பாற் பெயர்களை எடுத்துரைக்க.

**பகுதி — ஈ** **(3 × 10 = 30 மதிப்பெண்கள்)**

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விரிவான விடை தருக.**

30. நன்னூல் பாயிரவியல் கருத்துகளைத் தொகுத்துரைக்க.

31. பகுபத உறுப்புகள் குறித்து விவரித்தெழுதுக.

32. உயிரீற்றுப் புணரியல் எடுத்துரைக்கும் எண்ணுப்பெயர்கள் குறித்தெழுதுக.

33. வேற்றுமை என்பது யாது? எண்வகை வேற்றுமைகளை விவரிக்க.

34. அறுவகைத் தொகைமொழிகளை எடுத்துக்காட்டுடன் தெளிவுபடுத்துக.

| UG-A-129 | BTM-12X |
|---|---|

# U.G. DEGREE EXAMINATION – JUNE 2021

**தமிழ்**

**முதலாம் ஆண்டு**

## இலக்கணம்-1 (நன்னூல்: எழுத்து, சொல்.)

**காலம் : மூன்று மணி** **மதிப்பெண்கள் : 70**

**பகுதி - அ** **(3 × 3 = 9 மதிப்பெண்கள்)**

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் 100 சொற்களில் விடை தருக.**

1. பாயிரம் குறித்து எழுதுக.

2. ‘உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே’ - விளக்குக.

3. “அங்கை” - பிரித்து விதி கூறுக.

4. வேற்றுமையின் இலக்கணம் கூறி உருபுகளை நிரல்படுத்துக.

5. ஏகார இடைச்சொல் தரும் பொருண்மைகளைச் சுட்டுக.

**பகுதி - ஆ** **(3 × 7 = 21 மதிப்பெண்கள்)**

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் 200 சொற்களில் விடை தருக.**

6. சார்பெழுத்துக்களின் வகை தொகைளை நிரல்படுத்துக.

7. திசைப்பெயர்ப் புணர்ச்சியைச் சான்றுகளுடன் விளக்குக.

8. மீன், தேன் னகர ஈற்றுச் சொற்களின் சிறப்பு விதிகளை எடுத்துரைக்க.

9. ஆகுபெயரின் இலக்கணம் கூறி, வகைகளை விளக்குக.

10. தொகைநிலைத் தொடர்களைச் சான்றுடன் நிறுவுக.

**பகுதி - இ** **(4 × 10 = 40 மதிப்பெண்கள்)**

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் 500 சொற்களில் விடை தருக.**

11. மாணாக்கரின் தன்மைகுறித்தும் பயிலும் முறைமைக் குறித்தும் நன்னூலார் கூறுவனவற்றைத் தொகுத்துரைக்க.

12. லகர, ளகர ஈற்றுச் சொற்களின் புணர்ச்சி விதிகளைச் சான்றுகளுடன் நிறுவுக.

13. சாரியைகள் புணரும் முறைமைகளை விரித்துரைக்க.

14. வேற்றுமைகள் பயின்று வரும் முறைமையை நிறுவுக.

15. பொருள்கோளின் வகைகளைச் சான்றுகளுடன் விரித்துரைக்க.

16. உரியியல் செய்திகளைத் தொகுத்துரைக்க.

17. மெய் மயக்கங்கள் குறித்த நன்னூலாரின் கருத்துக்களை நிறுவுக.

| UG-A-132 | BTM-21 |
|---|---|

# U.G.DEGREE EXAMINATION – JUNE 2021

## தமிழ்

## இரண்டாம் ஆண்டு

## இடைக்கால இலக்கியம்

காலம் : மூன்று மணி மதிப்பெண்கள் : 75

**பகுதி - அ** **(10x1=10 மதிப்பெண்கள்)**

**எவையேனும் பத்து வினாக்களுக்கு ஓரிரு சொற்களில விடை தருக.**

1. பெரியாழ்வாரின் பாசுரங்கள் எச்சமயத்தைச் சார்ந்தது?
2. திருஞானசம்பந்தரின் உள்ளங்கவர்ந்த கள்வன் யார்?
3. இசுலாம் மதத்தைத் தோற்றுவித்தவர் யார்?
4. முக்குற்றங்கள் யாவை?
5. ஆழ்வார்கள் எத்தனை பேர்
6. பெரியாழ்வார் பாடிய திவ்வியப் பிரபந்தங்கள் யாவை?
7. வையம் அளந்தவன் யார்?
8. மஸ்தான் என்ற சொல்லின் பொருள் யாது?
9. இருவகைக் கூத்துகள் யாவை?
10. இந்திரவிழா யாருக்காக எடுக்கப்பட்டது?
11. புகார் நாட்டுக்கு முத்துப்பந்தர் யார் திரையாகத் தந்தது?
12. "நீ துயர் ஒழிக" என்று வாலி யாரிடம் கூறினான்?
13. வில்லறந் துறந்த வீரன் என்று வாலி யாரைக் குறிப்பிடுகின்றான்?
14. தேம்பாவணி எத்தனைக் காண்டங்களை உடையது?
15. "சூசை" எம்மரபில் தோன்றியவன்?

**பகுதி - ஆ** **(5x2=10 மதிப்பெண்கள்)**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஓரிரு தொடர்களில் விடை தருக.**

16. நாயன்மார்களின் வரலாற்றைக் கூறும் நூல்கள் யாவை?
17. சிவபெருமான் மாணிக்கவாசகரை எவ்வாறு ஆட்கொண்டார்?
18. கண்ணனுக்கு பிரமன் கொடுத்த பொருள்கள் யாவை?
19. குணங்குடியார் நிகழ்த்திய அற்புதங்கள் யாவை?
20. சிலப்பதிகாரம் குறிப்பிடும் திருமணச் சடங்குகள் யாவை?
21. இராமனிடம் வாலி வேண்டிய வரங்கள் யாவை?
22. தேம்பாவணியின் நூல் அமைப்பினை எழுதுக.

**பகுதி - இ** **(5x5=25மதிப்பெண்கள்)**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.**

23. ஆழ்வார்கள் குறித்து எழுதுக.
24. நாவுக்கரசர் குறிப்பிடும் சிவபெருமானின் செயல்கள் யாவை?
25. பெரியபுராணம் - குறிப்பு வரைக.
26. குணங்குடியார் கூறும் இறைவனின் இயல்புகளும், இறைவனிடம் வேண்டுவன குறித்தும் விளக்குக.
27. வாலியின் இறப்பிற்குத் தாரை எவ்வாறு அழுது புலம்பினாள் விளக்குக.
28. மருவூர்ப் பாக்கம், பட்டினப்பாக்கத்தின் மாண்புகளை இளங்கோவடிகள் எவ்வாறு விளக்குகிறார்?
29. தேம்பாவணி காப்பியம் குறித்து எழுதுக.

**பகுதி - ஈ** **(3x10=30 மதிப்பெண்கள்)**

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விரிவான விடை தருக.**

30. மாணிக்கவாசகரின் மெய்ஞ்ஞான வாழ்வியலை விவரித்தெழுதுக.
31. பெரியாழ்வாரின் பக்தித் திறனை வெளிப்படுத்தி கட்டுரை ஒன்றினை எழுதுக.
32. குணங்குடியாரின் இறைக்கொள்கையை விளக்கிக் கட்டுரை ஒன்றினை எழுதுக.
33. கானல்வரிப் பாடல்களின் கருத்துக்களைத் தொகுத்தெழுதுக.
34. தேம்பாவணி காப்பிய நலம் குறித்துக் கட்டுரை ஒன்றினை எழுதுக.

| UG-A-133 | BTM-22 |
|---|---|

# U.G.DEGREE EXAMINATION – JUNE 2021

## தமிழ்

### இரண்டாம் ஆண்டு

### இலக்கணம்-2 (நம்பியகப்பொருள், புறப்பொருள் வெண்பாமாலை)

காலம் : மூன்று மணி மதிப்பெண்கள் : 75

**பகுதி - அ (10x1=10 மதிப்பெண்கள்)**

**எவையேனும் பத்து வினாக்களுக்கு ஓரிரு சொற்களில் விடை தருக.**

1. அன்புடைக்காமம் எத்திணைக்குரியது?
2. முதற்பொருள் எனப்படுவது யாது?
3. களவிற்குரிய இருவகைப் புணர்ச்சிகள் யாவை?
4. பகற்குறி-பொருள் தருக.
5. பாங்கியற் கூட்டம் என்றால் என்ன?
6. "வரைவு கடாதல்"- பொருள் சுட்டுக.
7. "முன்னிலை மொழி"எனப்படுவது எது?
8. பரத்தையிற் பிரிவின் வகைகளை எழுது.
9. ஓழிபியல் கூறும் அகப்பாட்டு உறுப்புகள் எத்தனை?
10. வெட்சித் திணையின் இரண்டு வகைகளைக் கூறுக.
11. வேலேந்திய மறவனின் மாண்பு கூறும் வஞ்சித்துறை எது?
12. "வாள் செலவு"என்றால் என்ன?
13. எயில் காக்கும் புறத்திணை எது?
14. மைந்து பொருளாகப் போரடும் திணை எது?
15. பாலைத் திணைக்குப் புறனாகும் புறத்திணையைச் சுட்டுக.

## பகுதி - ஆ (5x2=10 மதிப்பெண்கள்)

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் ஓரிரு தொடர்களில அளவில் விடை தருக.**

16. குறிஞ்சிக்குரிய பெரும் பொழுது, சிறுபொழுதுகள் யாவை?
17. "ஒருவழித்தணத்தல்" - விளக்குக.
18. அறத்தொடு நிற்றல் என்றால் என்ன?
19. பாங்கிமதி உடன்பாட்டின் வகைகளை எழுதுக.
20. ஆகோள் - விளக்குக.
21. நூழில் - நூழிலாட்டு வேறுபாட்டினைக் கூறுக.
22. புறநிலை வாழ்த்து குறித்து எழுதுக.

## பகுதி - இ (5x5=25 மதிப்பெண்கள்)

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் ஒரு பக்க அளவில் விடை தருக.**

23. முல்லைத் திணைக்குரிய கருப்பொருளை எழுதுக.
24. எண்வகை மணங்களை எடுத்துரைக்க.
25. களவின்கண் நிகழும் பிரிவுகளை விளக்குக.
26. "உடன்போக்கு இரு நான்கு வகைத்தே"- விளக்குக.
27. கரந்தைப் படலத்தின் பிள்ளை துறைகளை விளக்குக.
28. தும்பை மகளிரின் வீரப் பண்புகளை எடுத்துரைக்க.
29. பாடாண் படலத்தின் பரிசில் வகைத் துறைகளை விளக்குக.

## பகுதி - ஈ (3x10=30 மதிப்பெண்கள)

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விரிவான விடை தருக.**

30. காட்சி முதலாகச் சொல்லப்பட்ட மெய்யுறு புணர்ச்சியின் வகைகளை விவரிக்க.
31. பாங்கியர் கூட்டத்தின் வகைகளாக நம்பியகப்பொருள் கூறுவனவற்றை விரித்துரைக்க.
32. வரைவியல் செய்திகளைத் தொகுத்துரைக்க.
33. காஞ்சிப் படலத்தின் துறைகளை விவரி.
34. நொச்சிப் படலச் செய்திகளைத் தொகுத்துரைக்க.

| UG-A-135 | BTM-31 |
|---|---|

**U.G DEGREE EXAMINATION – JUNE 2021**

# தமிழ்

## மூன்றாம் ஆண்டு

## சங்க இலக்கியம்

காலம் : மூன்று மணி மதிப்பெண்கள் : 75

**பகுதி - அ** **(10x1=10 மதிப்பெண்கள்)**

**எவையேனும் பத்து வினாக்களுக்கு மட்டும் ஓரிரு சொற்களில் விடை தருக.**

1. குறுந்தொகையை தொகுத்தவர் யார்?
2. எட்டுத்தொகையில் அக நூல்கள் எத்தனை?
3. பதிற்றுப்பத்தில் எத்தனைப் பாடல்கள் உள்ளன?
4. பரணரின் பாடலில் இடம் பொற்றுள்ள இலக்கணக் குறிப்பு யாது?
5. பரிபாடலில் மொத்தம் உள்ள பாடல்கள் எத்தனை?
6. ஏறுகளின் தோற்றம் எவ்வாறு உள்ளது?
7. அகநானூற்றில் உ்ளள பிரிவுகள் எத்தனை?
8. சிறு காரோடன் யார்?
9. மாமூலானார் பாடிய மன்னர் யார்?
10. பேகனின் செயலைக் கூறுக.
11. பரணர் மாரியை எவ்வாறு அழைக்கிறார்?
12. திருக்குறள் - அறத்துப்பாலில் எத்தனை அதிகாரம் உள்ளது?
13. மக்களுள் பதடி என வள்ளுவர் யாரைக் குறிப்பிடுகிறார்?
14. சிறுபாணாற்றுப் படையை எழுதியவர் யார்?
15. அதியன் யாருக்கு எதைத் கொடுத்தான்?

பகுதி - ஆ (5x2=10 மதிப்பெண்கள்)

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் ஓரிரு தொடர்களில் விடை தருக.**

16. பெருந்தேவனார் பாடலில் கொல்களிற்று ஒருத்தல் யாது செய்தது.
17. உழவர்கள் எதைக் களையெனக் கருதி கிள்ளி எறிந்தனர்?
18. தலைவன் மறந்ததாகத் தலைவி தோழியிடம் கூறியது யாது?
19. குழல் இணைவது போல் அழுதவள் யார்?
20. கடவுளின் தன்மைகளாக வள்ளுவர் கூறுவது யாது?
21. வஞ்சி நகரின் சிறப்பைக் கூறிய புலவர் யார்?
22. யாழின் உறுப்புக்கள் யாவை?

பகுதி - இ (5x5=25 மதிப்பெண்கள்)

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் ஒரு பக்க அளவில் விடை தருக.**

23. பழந்தமிழர் பண்புகளாக நற்றிணைக் கூறும் செய்திகள் யாவை?
24. அகப்பொருள் மாந்தர்களின் இயல்புகளை குறுந்தொகை வழி விளக்குக.
25. பதிற்றுப்பத்துக் கூறும் செங்குட்டுவனது வீரப்பண்பைக் கூறுக?
26. சாமவேதம் கூறுவதாகப் புலவர் கருதுபவை யாவை?
27. முல்லைக் கலிப் பாடலின் இலக்கிய நயத்தைக் கூறுக.
28. மழையின் சிறப்புக்களாக வள்ளுவர் கூறுவது யாது?
29. விறலியின் பேரழகை நத்தத்தனார் எவ்வாறு பாடுகிறார்?

பகுதி - ஈ (3x10=30 மதிப்பெண்கள்)

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விரிவான விடை தருக.**

30. நற்றிணைக் காட்டும் வாழ்வியல் நெறிகளை நும் பாடப் பகுதி கொண்டு விளக்குக?
31. தோழியிடத்து தலைவன் கூறிய மாற்றத்தை நும் பாடப் பகுதி வழி விளக்குக?
32. ஆய்ச்சியர் குரவைக் கூத்துப் பற்றி நீவிர் அறிவன யாவை விவரி?
33. பொருள் வயின் காரணமாக பிரியக் கருதிய தலைவன் செலவழுங்கிய பாங்கை பெருங்கடுங்கோ எவ்வாறு விளக்குகிறார்?
34. அறத்தின் சிறப்புக்களை வள்ளுவப்பெருந்தகை எவ்வாறு விவரிக்கிறார்?

| UG-A-136 | BTM-32 |
|---|---|

# U.G.DEGREE EXAMINATION – JUNE 2021

## தமிழ்

### மூன்றாம் ஆண்டு

### இலக்கணம் - 3 (யாப்பருங்கலக்காரிகை, தண்டியலங்காரம்)

காலம் : மூன்று மணி மதிப்பெண்கள் : 75

பகுதி - அ (10x1=10 மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு மட்டும் ஓரிரு சொற்களில் விடை தருக.

1. யாப்பு - என்பதன் பொருளைச் சுட்டுக.
2. அசைகளின் வகைகளைக் கூறுக.
3. விளச்சீர் எவை?
4. வஞ்சிப்பாவிற்குரிய ஓசை எது?
5. மூன்றடிகளில் பாடப்படும் வெண்பா எது?
6. மருட்பாவின் வகைகளை எழுதுக.
7. தண்டியலங்காரம் எந்த நூலைத் தழுவி எழுதப்பட்டது.
8. செய்யுள் நெறியின் வகைகளைச் சுட்டுக.
9. தன்மையணியின் வகைகள் யாவை?
10. சூக்கும அலங்காரம் எனப்படும் அணி எது?
11. பிறிது மொழிதல் அணி என அழைக்கப்படும் அணி எது?
12. ஆன்றோர் வியக்கத் தோன்றும் அணி யாது?
13. சமாயிதம் - பொருள் தருக.
14. பிரிமொழிச் சிலேடை என்றால் என்ன?
15. வாழ்த்தணியின் இலக்கணம் யாது?

பகுதி - ஆ (5x2=10 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் ஓரிரு தொடர்களில் விடை தருக.

16. செய்யுளின் உறுப்புகளாக யாப்பருங்கலக்காரிகை கூறுவன யாவை?
17. ஒன்றிய, ஒன்றாத தளைகளைக் குறிப்பிடுக.
18. கலித்தாழிசை குறித்து எழுதுக.
19. தன்மேம்பாட்டுரை அணி-வரையறை செய்க.
20. பின்வருநிலை அணியை விளக்குக.
21. விபாவனை அணியின் இலக்கணம் யாது?
22. நிரல்நிறையணி என்றால் என்ன?

பகுதி - இ (5x5=25 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் ஒரு பக்க அளவில் விடை தருக.

23. சீர்களின் வகைப்பாட்டை விளக்கி எழுதுக.
24. நால்வகை பாக்களுக்குரிய அடிவரையறையை எடுத்துரைக்க.
25. வெண்பாவின் இணங்களை விளக்குக.
26. செய்யுள் விகாரங்களைப் புலப்படுத்துக.
27. ஒட்டணியை விளக்குக.
28. தற்குறிப்பேற்ற அணியை விளக்கி எழுதுக.
29. விசேட அணியின் இலக்கணம் கூறி அதன் வகைளைச் சுட்டுக.

**பகுதி - ஈ** (3x10=30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விரிவான விடை தருக.

30. ஆசிரியப்பாவின் இலக்கணம் கூறி, அதன் வகைகைளைச் சான்றுகளுடன் விவரி.
31. ஒழிபியல் தரும் செய்திகளைச் சான்றுகளுடன் எடுத்துரைக்க.
32. சுவையணியைச் சான்றுகளுடன் எடுத்துரைக்க.
33. வேற்றுமை அணியை விளக்கி, அதன் வகைகளை விவரிக்க.
34. விசேட அணியின் இலக்கணம் கூறி, வகைகளை விளக்கி எழுதுக.

# U.G.DEGREE EXAMINATION – JUNE 2021

## தமிழ்

## மூன்றாம் ஆண்டு

## தமிழ் மொழி வரலாறும் தமிழ் இலக்கிய வரலாறும்

**காலம் : மூன்று மணி** **மதிப்பெண்கள் : 75**

**பகுதி - அ** (10 X 1 = 10 மதிப்பெண்கள்)

**எவையேனும் பத்து வினாக்களுக்கு மட்டும் ஓரிரு சொற்களில் விடை தருக.**

1. ஒலிப்பு அடிப்படையில் பேச்சொலிகள் எத்தனை வகைப்படும்?
2. தமிழின் பழமையான இலக்கண நூல் எது?
3. சோழர் காலத் தமிழில் பெருமளவில் காணப்படும் வேற்று மொழி எது?
4. பேச்சுத் தமிழில் ஆய்வு செய்துள்ள அறிஞர் இருவரை குறிப்பிடுக.
5. மராட்டிய எழுத்து முறையின் பெயர் யாது?
6. கிளைமொழி என்றால் என்ன?
7. இந்தியாவின் பழமையான மொழிக் குடும்பம் எது?
8. மாற்றிலக்கணத்தின் தந்தை யார்?
9. ஒப்பிலக்கியம் பற்றிய முதல் தமிழ் நூலை எழுதியவர் யார்?
10. தமிழ்நாட்டின் வால்டர் ஸ்காட் யார்?
11. தமிழ் வளர்த்த மடங்கள் இரண்டின் பெயர்களை எழுதுக.
12. காலத்தால் முற்பட்ட நீதி நூல் எது?
13. முதலில் தொகுக்கப்பட்ட சங்க இலக்கிய நூல் எது?
14. சொல்லியல் என்றால் என்ன?
15. ஏ.கே.செட்டியார் எழுதிய பயண இலக்கிய நூல் எது?

**பகுதி - ஆ** **(5 X 2 = 10 மதிப்பெண்கள்)**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் ஓரிரு தொடர்களில் விடை தருக.**

16. பழந்தமிழ்க் காலம் என்பது யாது?
17. எழுத்து முறையின் வகைகள் யாவை?
18. அறிவியல் தமிழ் என்றால் என்ன?
19. பிறமொழிக் கலப்பின் விளைவுகள் சிலவற்றைக் குறிப்பிடுக.
20. பக்தி இயக்கம் என்றால் என்ன?
21. இடைக்காலத்தில் எழுந்த பேரிலக்கிய நூல்கள் சிலவற்றைக் குறிப்பிடுக.
22. இலங்கைத் தமிழறிஞர்கள் நால்வரைக் குறிப்பிடுக.

**பகுதி - இ** **(5 X 5 = 25 மதிப்பெண்கள்)**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் ஒரு பக்க அளவில் விடை தருக.**

23. மொழியியலின் பிரிவுகள் யாவை? - விளக்குக.
24. உயிரொலிகளின் பிறப்பு குறித்து எழுதுக.
25. வட்டெழுத்துகள் பற்றி எழுதுக.
26. செய்யுள் வகைகள் பற்றி எழுதுக.
27. இடைக்கால இலக்கண நூல்கள் குறித்து எழுதுக.
28. சித்தர் பாடல்கள் பற்றி எழுதுக.
29. தமிழ்த்தொண்டு செய்த மேனாட்டுக் கிறித்தவர் நால்வர் குறித்து எழுதுக.

**பகுதி - ஈ** **(3 X 10 = 30 மதிப்பெண்கள்)**

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விரிவான விடை தருக.**

30. தமிழ் மொழி வரலாற்றில் தகவல் தொடர்பு சாதனங்களின் தாக்கம் பற்றி விவரிக்க.
31. சொற்பொருள் மாற்றம் குறித்துக் கட்டுரைக்க.
32. சங்க இலக்கியங்களின் சிறப்பியல்புகளை விவரிக்க.
33. இடைக்காலச் சிற்றிலக்கியங்கள் குறித்துக் கட்டுரைக்க.
34. தமிழிலக்கியத்தின் புதிய போக்குகளை விரித்தெழுதுக.

# U.G.DEGREE EXAMINATION – JUNE 2021

## தமிழ்

## மூன்றாம் ஆண்டு

## இலக்கியத் திறனாய்வும் படைப்பிலக்கியமும்

காலம் : மூன்று மணி மதிப்பெண்கள் : 75

### பகுதி - அ (10 X 1 = 10 மதிப்பெண்கள்)

**எவையேனும் பத்து வினாக்களுக்கு மட்டும் ஓரிரு சொற்களில் விடை தருக.**

1. இலக்கியம் என்றால் என்ன?
2. தமிழின் முதல் நாவல் எது? யார் எழுதியது?
3. "பொன்னியின் செல்வன்" - யாருடைய வரலாற்றை விவரிக்கிறது?
4. காப்பியத்திற்கு இலக்கணம் வகுத்த நூல் எது?
5. உத்தி என்றால் என்ன?
6. தமிழ் நாடக வளர்ச்சிக்குத் தொண்டாற்றிய இருவரைக் குறிப்பிடுக.
7. முரண் - சுவை குறித்து எழுதுக.
8. மேனாட்டுத் திறனாய்வாளர்கள் சிலரின் பெயரைக் குறிப்பிடுக.
9. தமிழில் கவிதையின் இரு வகைகள் யாவை?
10. இலக்கிய உணர்ச்சி என்றால் என்ன?
11. கலையின் நோக்கம் யாது?
12. திறனாய்வின் வகைகள் யாவை?
13. பரிதிமாற்கலைஞர் படைத்த நாடக நூல் ஒன்றைக் குறிப்பிடுக.
14. "செய்யுள்" என்னும் சொல்லிற்குரிய வேறு பெயர்களைக் குறிப்பிடுக.
15. வாய்மொழி இலக்கிய வகைகள் குறித்து எழுதுக.

### பகுதி - ஆ (5 X 2 = 10 மதிப்பெண்கள்)

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் ஓரிரு தொடர்களில் விடை தருக.**

16. திறனாய்வின் பயன் யாது?
17. கவின் கலைகள் எவை? எவை?
18. ஒப்பீட்டு முறைத் திறனாய்வு என்றால் என்ன?
19. ஒரு நூலைப் பல முறை படிப்பதன் மூலம் ஏற்படும் பயன் யாது?
20. திறனாய்வாளரின் இருவகை பணிகள் குறித்து எழுதுக.
21. மரபுக்கவிதை என்றால் என்ன?

22. இலங்கை திறனாய்வாளர்கள் குறித்து எழுதுக.

**பகுதி - இ (5 X 5 = 25 மதிப்பெண்கள்)**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் ஒரு பக்க அளவில் விடை தருக.**

23. திறனாய்வு குறித்து மேல் நாட்டாரின் கருத்துக்களை ஆராய்க.
24. திறனாய்வாளரின் தகுதிகள் குறித்து எழுதுக.
25. இலக்கியம் என்பதற்கு தொல்காப்பியம் கூறும் விளக்கங்களை விவரி.
26. வரலாற்று நாவல்கள் குறித்து விவரி.
27. இலக்கியமும் உளவியலும் குறித்து எழுதுக.
28. திரைக்கதை எழுதும் போது கவனத்தில் கொள்ள வேண்டியவை யாவை?
29. நாவல் படைப்பிற்குரிய அடிப்படை விதிகளாக கூறப்படுபவை யாவை?

**பகுதி - ஈ (3 X 10 = 30 மதிப்பெண்கள்)**

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விரிவான விடை தருக.**

30. தமிழ் இலக்கியத் திறனாய்வு அறிஞர்கள் குறித்து கட்டுரை வரைக.
31. திறனாய்வின் வகைகளை விவரி.
32. இலக்கியமும் பிறத்துறைகளும் குறித்து கட்டுரை வரைக.
33. திறனாய்வின் வளர்ச்சி, வரலாற்றினை விவரி?
34. இலக்கிய வகைகள் குறித்து கட்டுரை வரைக.

# U.G. DEGREE EXAMINATION – JUNE 2021

## தமிழ்

## முதலாம் ஆண்டு

## தமிழக வரலாறும் பண்பாடும் (சார்புப் பாடம்)

காலம் : மூன்று மணி — மதிப்பெண்கள் : 75

**பகுதி — அ** **(10 × 1 = 10 மதிப்பெண்கள்)**

**எவையேனும் பத்து வினாக்களுக்கு ஓரிரு சொற்களில் விடை தருக.**

1. தொல்பொருள் ஆய்வின் பயனாகக் கிடைக்கின்ற பழம்பொருட் சின்னங்கள் இரண்டினைக் கூறுக.
2. மக்களினம் முதன்முதலில் எங்கே தோன்றியது?
3. திராவிடர்களுடன் நெருங்கிய நாகரீகத் தொடர்புடைய நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக.
4. தமிழகத்தை ஆண்ட மூவேந்தர்கள் யார்?
5. முதற்பல்லவன் பெயரைக் கூறுக.
6. எவ்வாறு விசயாலயன் போற்றப்பட்டான்?
7. சோழர்காலத்தின் கட்டடக் கலைக்குச் சான்றாக விளங்குவது?
8. சோழர் காலத்தில் நிலவிய சமயங்கள் யாவை?
9. பிற்காலப் பாண்டியருள் சிறப்பிடம் பெற்றவன் யார்?
10. ஹரிஹரர், புக்கர் யாருடைய புதல்வர்கள்?
11. திருவாங்கூர் மன்னன் பெயர் என்ன?
12. மங்கம்மாள் கட்டியக்கட்டடங்கள் எவை?
13. அரசியல் சூழ்ச்சிகளில் கைத்தேர்ந்தவன் யார்?
14. இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக இருந்தவர் யார்?
15. சென்னைப் பல்கலைக்கழகம் எந்த ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டது?

பகுதி — ஆ (5 × 2 = 10 மதிப்பெண்கள்)

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஓரிரு தொடர்களில் விடை தருக.**

16. தொல்காப்பியம் - குறிப்பு வரைக.
17. பல்லவர் காலத்து நீர்ப்பாசன வசதிகள் யாவை?
18. பல்லவர்களின் இசைக் கலைகள் பற்றிக் கூறுக.
19. சோழர்களின் சமயப்பொறையைக் குறிப்பிடுக.
20. விஜயநகரத்தை ஆண்ட பரம்பரைகள் பற்றிக் கூறுக.
21. முத்துவீரப்ப நாயக்கரின் பண்பு நலன்கள் யாவை?
22. வேலூர்க் கலகம் என்பது யாது?

பகுதி — இ (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பக்க விடை தருக.**

23. மூச்சங்கங்கள் பற்றி எழுதுக.
24. பல்லவர்களின் ஓவியக்கலையின் மாண்புகளைக் கூறுக.
25. பிற்காலப் பாண்டியர்கள் குறித்துக் எழுதுக.
26. கிருஷ்ணப்ப நாயக்கரின் ஆட்சிமுறையை விளக்குக.
27. கிழக்கிந்தியக் கம்பெனியின் செயல்களை விளக்குக.
28. சிப்பாய்க்கலகம் - விளக்குக.
29. நாயக்கர் கால கோயில் திருப்பணிகள் யாவை?

பகுதி — ஈ (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விரிவான விடை தருக.**

30. தமிழகத்தின் இயற்கையமைப்பின் கூறுகளைத் தொகுத்துரைக்க.
31. பல்லவர்காலத்தில் தோன்றிய இலக்கியங்களைக் கட்டுரைக்க.
32. பிற்காலப் பாண்டியர்களின் அரசாட்சி முறையை விளக்கி வரைக.
33. நாயக்கர் கால அரசியலும் பண்பாடும் குறித்துக் கட்டுரைக்க.
34. இந்திய விடுதலைப் போரில் தமிழரின் பங்களிப்பினைப் புலப்படுத்துக.

| UG-A-130 | BTMAL-11X |
|---|---|

# U.G. DEGREE EXAMINATION – JUNE 2021

## தமிழ்

## முதலாம் ஆண்டு

## தமிழக வரலாறும் பண்பாடும் (சார்புப் பாடம்)

**காலம் : மூன்று மணி** **மதிப்பெண்கள் : 70**

### பகுதி — அ (3 × 3 = 9 மதிப்பெண்கள்)

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் 100 சொற்களில் விடை தருக.**

1. பழந்தமிழ் நாட்டின் எல்லைகள் யாவை?

2. பல்லவர்களின் வரலாற்றை அறிய உதவும் சான்றாதாரங்களைக் குறிப்பிடுக.

3. திருப்புறம்பியப் போர் குறித்து எழுதுக.

4. பதின்மூன்றாம் நூற்றாண்டில் தென்னகத்தை ஆண்ட பேரரசுகள் எவை?

5. வீரபாண்டியக் கட்டபொம்மன் குறித்து எழுதுக.

### பகுதி — ஆ (3 × 7 = 21 மதிப்பெண்கள்)

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் 200 சொற்களில் விடை தருக.**

6. சங்ககால குறுநில மன்னர்கள் குறித்து எழுதுக.

7. இரண்டாம் புலிகேசியின் படையெடுப்பை விவரி.

8. காந்தளூர்ச் சாலைப் போர் குறித்து விளக்குக.

9. விஜயநகரப் பேரரசு உருவான வரலாற்றை விவரி.

10. விடுதலைப் போருக்கான தமிழகத்தின் பங்களிப்பை எடுத்துரைக்க.

**பகுதி — இ** **(4 × 10 = 40 மதிப்பெண்கள்)**

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் 500 சொற்களில் விடை தருக.**

11. தமிழக வரலாற்றினை அறிய உதவும் அடிப்படைச் சான்றுகள் குறித்து கட்டுரைக்க.

12. பல்லவர்களின் ஆட்சி முறை அமைப்பைத் தொகுத்துரைக்க.

13. சோழர் கால இலக்கிய மறுமலர்ச்சியை விரித்துரைக்க.

14. நாயக்கர் கால 'மைய அரசு ஆட்சி முறையை' விவரிக்க.

15. விடுதலைக்குப் பின் தமிழகம் பெற்ற மாற்றங்களைத் தொகுத்துரைக்க.

16. நீதிக் கட்சியின் சாதனைகளை விவரி.

17. முச்சங்கம் குறித்த வரலாற்று அறிஞர்களின் கருத்தாடல்களைத் தொகுத்துரைக்க.

# U.G.DEGREE EXAMINATION – JUNE 2021

## தமிழ்

## இரண்டாம் ஆண்டு

## இதழியல் (சார்புப் பாடம்)

காலம் : மூன்று மணி மதிப்பெண்கள் : 75

பகுதி - அ (10x1=10 மதிப்பெண்கள்)

**எவையேனும் பத்து வினாக்களுக்கு மட்டும் ஓரிரு சொற்களில் விடை தருக.**

1. இந்தியாவில் தோன்றிய முதல் இதழ் எது?
2. மணி ஒலித்தல் மூலம் செய்தி அறிவித்த மன்னர் யார்?
3. காந்தியடிகள் தொடங்கிய இதழ்கள் இரண்டைக் கூறுக.
4. செய்தித் தாளின் நோக்கம் யாது?
5. பாரதியார் நடத்திய இதழ்களைக் கூறுக?
6. சர்வாதிகாரம் - குறிப்புத் தருக.
7. கல் கண்டு இதழின் ஆசிரியர் யார்?
8. வார இதழ்கள் இண்டைக் கூறுக.
9. நகர்ப்புறச் செய்தியாளர் யார்?
10. பிரஸ் என்ற ஆங்கிலச் சொல்லைத் தமிழில் எவ்வாறு அழைக்கிறோம்?
11. செய்தியாளரின் பணிகள் இரண்டைக் கூறுக.
12. செய்தி ஆசிரியரின் தகுதிகள் இரண்டைக் கூறுக.
13. செய்தித் தலைப்பின் வகைகள் யாவை?
14. உலகில் தோன்றிய முதல் செய்தி நிறுவனம் எது?
15. சுருக்கம் என்றால் என்ன?

## பகுதி - ஆ (5x2=10 மதிப்பெண்கள்)

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் ஓரிரு தொடர்களில் விடை தருக.**

16. அச்சுப் பொறி யாரால் எந்த ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது.
17. தமிழ் இதழியலாளர் இருவரைக் கூறுக.
18. செய்தியாளரின் பணிகள் யாவை?
19. காலாண்டு இதழ்கள் என்றால் என்ன?
20. அஞ்சல் தந்தி சட்டம் எந்த ஆண்டு இயற்றப்பட்டது?
21. செய்தியின் மூலங்கள் இரண்டைக் கூறுக.
22. பக்க வடிவமைப்பின் வகைகள் யாவை?

## பகுதி - இ (5x5=25 மதிப்பெண்கள்)

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் ஒரு பக்க அளவில் விடை தருக.**

23. அயல் நாடுகளில் செய்தி பரவிய முறையைக் கூறுக.
24. நவசக்தி இதழின் குறிக்கோள்களை எழுதுக.
25. இதழ்கள் படிப்பறிவை வளர்க்கின்றனவா? விளக்குக.
26. மருத்துவ இதழ்களின் பணிகளைக்க கூறுக.
27. இதழ்களின் சுதந்திரம் குறித்து எழுதுக.
28. சமாச்சார் பாரதி - குறிப்புத் தருக.
29. நீதிமன்றச் செய்திகளை எவ்வாறு எழுதுவாய்? சான்றுகாட்டுக.

## பகுதி - ஈ (3x10=30 மதிப்பெண்கள்)

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விரிவான விடை தருக.**

30. சிலப்பதிகாரத்தில் செய்தி எவ்வாறு பரப்பப்பட்டது? விளக்குக.
31. இந்திய செய்தி நிறுவனங்களின் பணிகளை விவரி.
32. தலைப்பின் வகைகளைக் கூறி அதன் வகைகளை விளக்குக.
33. இதழ்களின் பணி, பொறுப்புகள் குறித்து கட்டுரை வரைக.
34. ஆசிரியர் குழுவின் பணிகளை விளக்குக.

| UG-A-139 | BTMAO-01 |
|---|---|

## U.G.DEGREE EXAMINATION – JUNE 2021

## தமிழ்

## மூன்றாம் ஆண்டு

## நாட்டுப்புறவியல் (வாழ்வியல் தொடர்புப் பாடம்)

காலம் : மூன்று மணி மதிப்பெண்கள் : 75

### பகுதி – அ (10 X 1 = 10 மதிப்பெண்கள்)

**எவையேனும் பத்து வினாக்களுக்கு மட்டும் ஓரிரு சொற்களில் விடை தருக.**

1. நாட்டுப்புறவியலின் வேறு பெயர்களைச் சுட்டுக.
2. இலக்கியங்களின் தாயாக கருதப்படுவது எது?
3. Folklore என்னும் சொல்லை முதலில் பயன்படுத்தியவர் யார்?
4. தொழில் பாடல்கள் இரண்டினைக் கூறுக.
5. ஒப்பாரிப் பாடலில் இலக்கிய வடிவம் எது?
6. தாலாட்டுப் பாடலில் மேலோங்கி நிற்கும் உறவு முறை எது?
7. கதைப்பாடல்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
8. விடுகதையின் வேறு பெயர்களைச் சுட்டுக.
9. ‘உபகதை’ என்று அழைக்கப்படுவது எது?
10. நாட்டுப்புறக் கைவினைப் பொருட்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
11. கிராமத்து இசைக்கருவிகள் சிலவற்றைக் கூறுக.
12. பாவைக் கூத்து என்றால் என்ன?
13. கிராமத்து மக்களின் நம்பிக்கைகள் இரண்டினைக் குறிப்பிடுக.
14. நாட்டுப்புற மருத்துவ முறைகளைச் சுட்டுக.
15. மருத்துவம் கூறும் பழமொழி ஒன்றைக் கூறுக.

### பகுதி - ஆ (5 X 2 = 10 மதிப்பெண்கள்)

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் ஓரிரு தொடர்களில் விடை தருக.**

16. நாட்டுப்புறவியலோடு சமூகவியலுக்கு உள்ள தொடர்பு யாது?
17. ‘பன்மலர்ப் பாடல்கள்’ என்றால் என்ன?
18. நாட்டுப்புறப் பக்திப் பாடல்களின் வகைகள் சிலவற்றைக் குறிப்பிடுக.
19. நாட்டுப்புறக் கதைகளின் நோக்கத்தினை விளக்குக.

20. கதைப் பாடல்களின் வகைகளைக் குறிப்பிடுக.
21. வில்லுப்பாட்டு குறித்து எழுதுக.
22. இயற்கை மருத்துவம் குறித்து எழுதுக.

**பகுதி - இ** **(5 X 5 = 25 மதிப்பெண்கள்)**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் ஒரு பக்க அளவில் விடை தருக.**

23. நாட்டுப்புறவியலின் தோற்றம் குறித்து எழுதுக.
24. ஒப்பாரிப் பாடல்கள் குறித்து விளக்குக.
25. ஏற்றப்பாட்டு பாடும் முறைகளை எடுத்துரைக்க.
26. விடுகதைகளின் வகைகளை நிரல்படுத்துக.
27. கணியான் கூத்து நிகழ்த்தும் முறையை எடுத்துரைக்க.
28. கிராமப்புற விளையாட்டுகள் குறித்து எழுதுக.
29. மண்பாண்டக் கலையின் சிறப்பினை எடுத்துரைக்க.

**பகுதி - ஈ** **(3 X 10 = 30 மதிப்பெண்கள்)**

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விரிவான விடை தருக.**

30. கொண்டாட்டப் பாடல்களை வகைப்படுத்தி விவரிக்க.
31. விடுகதை மற்றும் பழமொழியின் சிறப்பினை விரித்துரைக்க.
32. நிகழ்த்துக் கலைகளின் தன்மைகளையும் அவற்றின் வகைகளையும் தொகுத்துரைக்க.
33. நாட்டுப்புற மக்களின் உணவு, பழக்க வழக்கங்கள் குறித்து விவரிக்க.
34. நாட்டுப்புற மக்களின் மருத்துவ முறைகளை விவரிக்க.